**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.140/2025** |
| Deposition of witness | : | P.W.4 |
| Name | : | சேவியர் |
| Father's /Husband Name | : | ஆரோக்கியதாஸ் |
| Village | : | கிராமத்து மேடு |
| Taluk | : | கீழ்வேளூர் |
| Age | : | 42 |
| Occupation | : | கூலி வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 04th day of November 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது வேளாங்கண்ணி வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 02.06.2025 ம் தேதி காலை 11.30 மணியளவில் நானும், இங்கல்சால், வைரவநாதன் மற்றும் அ.சா.1 ஆகியோருடன் காப்பணாமங்கலத்திற்கு வேலி வைப்பதற்காக வந்திருந்தோம். அப்போது அங்கு வந்த ஆஜர் எதிரி அ.சா.1 ஐ கழுத்தை பிடித்து கீழே தள்ளி கட்டையை எடுத்து அடிக்க வந்தார். தடுத்த அ.சா.3 வைரவநாதனை ஆஜர் எதிரி சட்டையை பிடித்து அடித்தார். மீண்டும் 04.06.2025 ம் தேதி குடவாசல் போலீசார் விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **என்னுடைய கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக குடவாசல் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் கடந்த 04.06.2025 தேதியன்று குடவாசலுக்கு எத்தனை மணிக்கு வந்தேன் என்றால் சுமார் 11-12.30 மணியளவில் வந்தேன். நானும் அ.சா.2 ம் ஒரே தெருவைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பார்வை மகசரில் உள்ள

கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து தான் வாங்கினார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து தான் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொல்லியுள்ளதை போலீசார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். ஆஜர் எதிரிக்கும் அ.சா.1 க்கும் இடையே உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.1 ஐ எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் அ.சா.1 வேளாங்கண்ணி ஊரைச் சேர்ந்தவர் என்பதால் சிறுவயதிலிருந்தே தெரியும். என்னுடன் பார்வை மகசரில்யார் கையொப்பம் செய்தார்கள் என்று தெரியுமா என்றால் ஞாபகமில்லை. அ.சா.1 எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.04 10:33:39 +05'30'

`

District Munsif-Cum-
Judicial Magistrate,
Kodavasal.